FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | பரத நாட்டியம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ சரியான விடையினைத் தெரிவு செய்க.

1) நீர் கற்ற அலாரிப்பின் இராகம்.
1. ஆரபி 2. பூர்வி கல்யாணி 3. நாட்டை
4. கௌளை 5. பிலகரி

2) பர்வதம் என அழைக்கப்படும் யதி.
1. ஸ்ரோதோவகயதி 2. கோபுச்ச யதி 3. டமருகயதி
4. விஷமயதி 5. மிருதங்க யதி

3) இறைபுகழை கவிச்சொற்கட்டில் பாடி அபிநயிக்கும் உருப்படி.
1. கௌத்துவம் 2. அலாரிப்பு 3. வர்ணம்
4. கீர்த்தனை 5. பதம்

4) வேதாகம முறைப்படி விவாகம் செய்து கொண்ட பெண்ணுடன் வாழ்பவன்.
1. உபபதி 2. வைசிகன் 3. தீரலலிதன் 4. பதி 5. தீரசாந்தன்

5) கண்டிய நடனத்தின் பாதநிலை.
1. அரைமண்டி 2. அங்கப்ரமரீ 3. மண்டிய
4. முழுமண்டி 5. சமபாதம்

6) உயர் குடியினரின் மொழி என்பது,
1. அதிபாஷை 2. ஆர்ய பாஷை 3. ஜாதி பாஷை
4. யூன்யந்தரி பாஷை 5. ஆதி பாஷை

7) பதவர்ணங்களில் தீர்மானம் முடிவுற இடம்பெறுவது,
1. கோர்வை 2. ஜதி 3. தாளம் 4. அடவு 5. அறுதி

8) அதீதம், அநாகதம், சமம் ஆகி பிரிவுகளைக் கொண்டது.
1. அங்கம் 2. கிரஹம் 3. காகபாதம் 4. புலுதம் 5. குரு

9) ஸ்தாயி பாவம் என்பது,
1. நிலையற்ற தன்மை 2. உணர்ச்சிகளின் வெளிப்பாடு உடையது.
3. நிலைத்ததன்மை உடையது. 4. ரஸ வெளிப்பாடு உடையது.
5. ரஸத்துடன் நேரடியான தொடர்புடையது.

10) ரௌத்ர ரஸத்திற்குரிய கடவுள்.
1. விஷ்ணு 2. மன்மதன் 3. எமன் 4. உருத்திரன் 5. பிரம்மா

11) லதாங்கி, பெஹாக் இராகங்களுக்கு உரிய ரஸம்
1. கருணா 2. பயானக 3. சாந்த 4. வீர 5. அற்புத

agaram.lk

12) கந்துக நிருத்தம் காணப்படும் ஆடல் வடிவம்.
1. பரதநாட்டியம் 2. மணிப்புரி 3. மோகினி ஆட்டம்
4. ஒடிசி 5. குச்சுப்புடி

13) தான வீரனுக்கு உதாரணமாகத் திகழ்பவர்.
1. மகேந்திர வர்மன் 2. அர்ச்சுணன் 3. தசரதன்
4. கர்ணன் 5. சிபிச் சக்கரவர்த்தி

14) நாட்டிய சாஸ்திரத்தை தெலுங்கில் மொழிபெயர்த்தவர்.
1. மானவல்லி ராம கிருஷ்ணகவி 2. பரதமுனிவர்
3. ஆறுமுகநாவலர் 4. ஆனந்தக் குமாரசுவாமி
5. நந்திகேஸ்வரர்

15) க்ரீவா வேதத்தை அடிக்கடி எடுத்துக் கொள்ளும் சாஸ்தீரய நடனம்.
1. பரதம் 2. கதக் 3. மணிப்புரி 4. ஒடிசி 5. குச்சுப்புடி

16) முதன் முதலில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இந்திய நடனத்தை ஆடிக்காட்டியவர்.
1. அருண்டேல் 2. மார்க்கல் 3. லெனின்
4. ருத்செயின்ட் டென்னி 5. அன்னாபவ்லோவா

17) தசரதன் எவ்வகையான நாயகன்.
1. அனுகூலன் 2. உபபநி 3. சடன் 4. பீடமர்த்தன் 5. தக்ஷினன்

18) தெய்வத்தை முதன்மைப்படுத்தி ஆடப்படும் சடங்கு,
1. திவிதோஷ 2. சீதாயக்கம் 3. மஹாயக்கம
4. மலேயக்கம் 5. கொஹோம்பகங்காரிய

19) யாழ்ப்பாணத்தில் வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடனம் பற்றி சொற்பொழிவு ஆற்றியவர்.
1. ஈ. கிருஷ்ணையர் 2. ருக்மணிதேவி அருண்டேல் 3. பாலசரஸ்வதி
4. அருணாசலநட்டுவனார் 5. சுப்பராயநட்டுவனார்.

20) சதுர்தண்டிப் பிரகாசிகை என்ற நூலின் ஆசிரியர்.
1. ரகுநாதநாயக்கர் 2. விஜய ராகவர் 3. ராஜகோபால்
4. தஞ்சை சரஸ்வதி 5. கோகிலாம்பாள்

agaram.lk

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

1) 1. நீர் கற்ற வர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. (01 புள்ளிகள்)
   2. வர்ணத்தின் நாயகன், நாயகி, சாகித்திய கர்த்தா, நடன அமைப்பு போன்றவற்றைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   3. வர்ணத்தின் லக்ஷணத்தைத் தருக. (06 புள்ளிகள்)
   4. வர்ணத்தின் முதலாவது தீர்மானத்தை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. (10 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

2) 1. அஷ்ட வித நாயகிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   2. அவர்களின் இலட்சணங்களையும், குண இயல்புகளையும் செயல் விபரங்களையும் குறிப்பிடுக. (16 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

3) "ஆலயங்கள் பரதக் கலையின் காப்பகம்" இக்கூற்றினை சோழர் காலத்தை மையமாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

4) சிறுகுறிப்பு எழுதுக.
   1. சிருங்காரமும் அதன் வகைகளும்
   2. அபிநயம் (2 x 10 = 20 புள்ளிகள்)

5) "பிராணி மித்ரா" என அழைக்கப்படும் நடனக் கலைஞரின் வாழ்க்கைப் பின்னணியையும் கலைத் தொண்டினையும் தருக. (20 புள்ளிகள்)

6) இந்திய சாஸ்திரீய நடனமான குச்சுப்புடி நடனத்தின் தோற்றம், வளர்ச்சி, இசைக்கருவி, ஆடை அணிகள் பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

agaram.lk